**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 06.11.2020 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 5795/E/2019**

திரு.T.கருணாகரன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல் மேற்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 29.04.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 16.05.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 20.06.2019 |

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (06.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.T.கருணாகரன் அவர்கள் தனது

சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால், இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.உமாமகேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மேற்கு வட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 29.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் அவர்களுக்கு பன்றிமலை கிராமத்தில் உள்ள சர்வே எண்.438/4 ல் உள்ள நிலத்தில் மரங்களை வெட்டிக்கொள்ள புலத்தணிக்கை செய்து பதில் அறிக்கை தாக்கல் செய்வதற்காக அனுப்பிய குறிப்பாணைக்கு மேற்படி அலுவலரால் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பிய பதில் அறிக்கையின் நகல், மேற்படி இடத்தை எந்த எந்த தேதியில் அலுவலரால் புலத்தணிக்கை செய்யப்பட்டது என்றும், அதற்காக பன்றிமலை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்கள் தாக்கல் செய்திருக்கும் அறிக்கையின் நகல், மேற்படி குறிப்பாணை சம்மந்தமாக மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு எந்த தேதியில் பதில் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் உள்ளிட்ட 4 இனங்களில் தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 13.05.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 16.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 20.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்களை 15 தினங்களுக்குள் வழங்குவதாக தொலைபேசி வாயிலாக வாக்குமூலமாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்தும், மேல்முறையீட்டாளருக்கு கூடுதலாக ஒரு வாய்ப்பளித்தும் விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் வாக்குறுதிப்படி முழுமையான தகவலினை அனுப்பிவைப்பதோடு, மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர**

அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 29.04.2019 தேதியிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள தகவல் தொடர்புடைய பதிவேடுகள், கணினி நடவடிக்கைகள், ஆவணங்கள், கோப்புகள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ காட்சிகள் அடங்கிய CD அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

ஒம்/- ச.செல்வராஜ்
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப்பதிவாளர்.

<u>வழக்கு எண்.SA 5795/E/2019</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல் மேற்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

<u>மனுதாரர்</u>
திரு.T.கருணாகரன்,
த/பெ.திருநாவுக்கரசு,
பன்றிமலை அஞ்சல்,
பெரும்பாறை (வழி)
திண்டுக்கல் மாவட்டம் - 624 212.

Copy to: Judgement File.
*"VP / PA -10.11.2020"*